**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குமாரபாளையம்**

**அ.வ.எண். 348 /2020**

**நாள்– 15.07.2025**

**வா.சா. 1 – திரு. எல்.ராமசாமி**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1) நான் இவ்வழக்கில் சுமார் 20 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி ஆவணங்கள் பற்றிய விவரங்கள் எனக்கு தெரியும்.வா.சா.ஆ.1 எதற்காக செய்யப்பட்டுள்ளது என்றால் எங்கள் முன்னோர்கள் இந்த ஊரில் இருப்பதை காட்டுவதற்காக மற்றும் நிலங்கள் தாக்கல் செய்யப்பட்டது. வா.சா.ஆ.1 இல் உள்ள சொத்துகள் குமாரசாமி அய்யர் அவர்களிடம் அடமானம் வைத்த சொத்துக்கள் தான் என்றால் சரிதான். மேற்படி அடமானத்தை தீர்த்ததற்கான எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2, 3, 4ல் எந்த பக்கத்தில் எந்த பத்தியில் பூஜைக்கு காரியங்கள் செய்து கொள்வதற்காக என்று கண்டுள்ளது என்றால் மேற்படி பத்திரங்களில் இல்லை. மேற்படி பத்திரங்கள் யாவும் பாகப்பிரிவினை பத்திரங்கள் ஆகும். வா.சா.ஆ.5 என்பது 'B'– மெமோ ஆகும். வா.சா.ஆ.5 என்பது வாரியையும் குட்டையையும் சட்டவிரோதமாக ஆக்கிரமிப்பு செய்ததற்கான எங்கள் முன்னோருக்கு வழங்கப்பட்ட அறிவிப்பு என்றால் அது வருவாய்த் துறையினரால் கொடுக்கப்பட்ட அறிவிப்பு ஆகும்.

2) வா.சா.ஆ.5 ல் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண்.96/3 மற்றும் 97. மேற்படி நிலங்களுக்கும் கோயிலுக்கும் சம்பந்தமில்லை என்றால் மேற்படி நிலத்திலிருந்து வரும் வருவாயை கோவில் செலவுகளுக்காக பயன்படுத்துவோம். வா.சா.ஆ.7,8,9 ஆகியவை பிள்ளையார் கோயிலின் வரவு செலவு கணக்கு என்றால் சரிதான். மேற்படி கணக்குகள் அனைத்து சமூக மக்களிடமிருந்து வசூல் செய்த பணத்திற்கான கணக்குகள் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களில் நாங்கள் தர்மகர்த்தா என்றோ கோவில் நிர்வாகஸ்தர்கள் என்றோ குறிப்பிடப்படவில்லை என்றால் குறிப்பிடப்படவில்லை, நாங்கள் நிர்வாகஸ்தர்கள் என்ற உரிமையில் மேற்படி ஆவணங்கள் எங்களிடம் உள்ளது. மேற்படி ஆவணங்கள் 1987 முதல் 1997 வரையிலான கணக்கு வழக்குகள் என்றால் சரிதான். கோவில் சொத்துக்களைத் தவிர வேறு அசையா சொத்துக்கள் ஏதும் உள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.7 பக்கம் 170 ல் வயக்காடு கந்தாய இடம் என்று கண்டுள்ளது எந்த இடம் என்றால் அது B மெமோவில் குறிப்பிடப்பட்ட இடம். வா.சா.ஆ.7 ல் பல பேருக்கு கந்தாயத்திற்கு விட்டது போல் உள்ளது என்றால் சரிதான்.

3) மேற்படி சொத்துக்கள் தனிநபர் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டு விட்டதா என்றால் இல்லை 'B' மெமோவில் குறிப்பிடப்பட்ட நபர்களின் பெயரில் தான் உள்ளது.

இந்த பூமிகளுக்கான கணக்குகள் 1997க்குப் பின்னிட்ட காலங்களுக்கு காட்டப்படவில்லை என்றால் சரிதான். 1987 முதல் 1997 வரை ஏலம் விடப்பட்ட விவரங்கள் வா.சா.ஆ.7ல் உள்ளது என்றால் சரிதான். நான் கோவில் தர்மகர்த்தா மற்றும் நிர்வாகஸ்தர் என்று கூறிக்கொண்டு கோவில் நிலங்களை அபகரித்துக்கொண்டு அதில் வரும் வருவாயை அபகரித்துக்கொண்டு கணக்கு வழக்குகளை சரியாகக் காட்டவில்லை என்றால் சரியல்ல.

4) 2003 ம் ஆண்டுக்கான கோவில் கட்டுமானம் மற்றும் கும்பாபிஷேகத்திற்கான வரவு செலவு கணக்குகள்தான் வா.சா.ஆ.9 என்றால் சரிதான். வா.சா.ஆ.9ல் பக்கம் 1ல் காணப்படுவது ஊர்ப்பொதுமக்களின் தீர்மானம் என்றால் சரிதான். மேற்படி தீர்மானத்தில் ரங்கனூர் ஊர்ப்பொதுமக்கள் என்றுதான் காணப்பட்டுள்ளது என்றாலும் தர்மகர்த்தா என்று காணப்படவில்லை என்றாலும் சரிதான். மேற்படி ஆவணத்தில் 15.05.2002 அன்று ரங்கனூர் சக்திவிநாயகர் கோவில் திருப்பணி தொடங்கப்படுவதற்காக ஊர்ப்பொதுமக்கள் மத்தியில் கூட்டம் நடைபெற்றது என்றுள்ளது என்றால் சரிதான். மேலும் அனைத்து சமூக மக்களிடமும் வசூல் செய்யலாம் என்று கண்டுள்ளது என்றால் ஊர்ப்பொதுமக்களிடம் வசூல் செய்யலாம் என்று கண்டுள்ளது. வா.சா.ஆ.9ல் அனைத்து சமூக மக்களிடமிருந்தும் வரி வசூல் செய்யப்பட்டதாகக் காணப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.9ன் படி நான் தர்மகர்த்தா இல்லை என்று தெரியவருகிறது என்றால் சரியல்ல.

5) வா.சா.ஆ.10,11ல் எங்கள் சமூகத்தினருக்கும் போயர் சமூகத்தினருக்கும் பிரச்சனை ஏற்பட்டதாக கண்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.10 உருவாக்கப்பட்ட நகல் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.11ல் ஒரு சின்னத்துரை என்பவர்தான் தர்மகர்த்தா என்று கண்டுள்ளது என்றால் சரிதான். அன்று நடந்த அமைதிக் கூட்டத்தில் என்னால் கலந்துகொள்ள இயலாததால் அவர் கலந்து கொண்டார். 2018,2019ம் ஆண்டுகளிலும் அமைதிக் கூட்டங்கள் நடைபெற்றது என்றாலும் அதில் நான் கலந்துகொண்டேன் என்றாலும் அதிலுள்ள சங்கதிகள் உண்மை என்றாலும் சரிதான். **2018 மற்றும் 2019ம் ஆண்டுகளில் நடந்த அமைதிக் கூட்டத்திற்கான நடவடிக்கைகள் பி.சா.ஆ.1 மற்றும் 2 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** வா.சா.ஆ.11ன் படி எனக்கும் கோவிலுக்கும் சம்பந்தமில்லை என்றாலும் அதனால்தான் கோட்டாட்சியர் எனக்கு அறிவிப்பு கொடுத்து என்னை விசாரிக்கவில்லை என்றாலும் சரியல்ல, என்னால் கலந்து கொள்ள இயலாததால் என் தம்பி கலந்து கொண்டார்.

6) வா.சா.ஆ.12, 13 ஆகியவை பிரதிவாதிகள் எங்கள் மீது அவதூறு எழுப்பியதற்கான சான்றாகும். மேற்படி ஆவணங்கள் போயர் சமூகத்தினரை எங்கள் சமூகத்தினர் ஊரைவிட்டு ஒதுக்கிவைத்தற்கான ஆவணங்கள் என்றால் சரியல்ல.

எங்கள் சமூகத்தினைச் சேர்ந்த புவனேஸ்வரி என்ற பெண்ணும் போயர் சமூகத்தினைச் சேர்ந்த விஜயகுமார் ஆகியோரும் கலப்புத் திருமணம் செய்துகொண்டதால் ஊருக்குள் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி சங்கதிகள் செய்தியாகவே வந்துள்ளது என்றால் சரியல்ல. மேற்படி புவனேஸ்வரி என்னுடைய பெரியப்பா பேத்தி ஆவார். அதற்கு முன்பே பிரச்சனை இருந்ததாக நான் வழக்கிற்காகப் பொய்யாகக் கூறுகிறேன் என்றால் சரியல்ல.

7) வா.சா.ஆ.15ல் இருதரப்பினரும் எந்தவொரு பிரச்சனையும் செய்யமாட்டோம் என்று எழுதிக் கொடுத்த முச்சலிகா என்றால் சரிதான். வா.சா.ஆ.16 தாவா சொத்துடைய புலவரைபடம் என்றால் சரிதான். 2015ம் ஆண்டு புலவரைபடத்தில் உள்ளதுபோல்தான் தாவா சொத்தும் அதைச் சுற்றியுள்ள சொத்துக்களும் இருந்தது என்றால் தாவா சொத்து சரியாக உள்ளது. தாவா கோவில் சொத்திற்கு வடபுறமும், கிழபுறமும் காலியிடமாகக் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவை அனைத்தும் புறம்போக்கு இடங்கள் என்றால் சரியல்ல, எங்கள் பங்காளிகளின் அனுபவத்திலுள்ள கிராம நத்த இடமாகும். எங்கள் பங்காளிகள் அனுபவத்தில் இருப்பதற்கான ஆவணங்களைத் தாக்கல் செய்துள்ளேனா என்றால் 1913ம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட பாகப்பிரிவினைப் பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேன். தற்போது மேற்படி தாவா சொத்தினைச் சுற்றியுள்ள காலியிடங்களில் அனுபவத்திலுள்ளதைக் காட்ட என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வருவாய்த்துறை ஆவணங்கள் இல்லை. கோவிலும் கோவிலைச் சுற்றியுள்ள இடங்களும் அரசுக்குப் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்பதால் அதைப்பொறுத்து வருவாய்த்துறை ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல, அவை கிராம நத்த இடங்களாகும்.

8) எனது வழக்குரையின் சொத்துவிவரத்தில் முத்துசாமி கவுண்டர் மகன் ராமசாமி நிலத்திற்கும், ஆறுமுகக் கவுண்டர் (வ) நிலங்களுக்கும் அவற்றிற்கும் தெற்கில் கிழமேலாகச் செல்லும் மணியக்காரர் வீதிக்கும் தெற்கு, சுப்புகவுண்டர் (வ) நிலங்களுக்கும் கிழக்கு என்று காணப்பட்டதை வா.சா.ஆ.16ல் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படி வழக்கு 2015ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டது என்றாலும் வா.சா.ஆ.16 2015ம் ஆண்டு பெறப்பட்டது என்றாலும் சரிதான். என் வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து விவரம் தவறு என்றாலும் மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.17 2003ம் ஆண்டு நடைபெற்ற கும்பாபிஷேக பத்திரிகை ஆகும். வா.சா.ஆ.17ல் ஜிர்ணோத்தாரண அஷ்டபந்தன மற்றும் மஹா கும்பாபிஷேக என்ற எழுத்துக்களின் நடுவில் கோடு வருகிறது என்றால் சரியல்ல, அவை சுட்டிக்காட்டுவதற்காகப் போடப்பட்ட கோடுகள். வா.சா.ஆ.17ல் உள்ள கோடுகள் மற்றும் கட்டங்கள் மற்றும் எழுத்துக்கள் தாறுமாறாக உள்ளது, வழக்கிற்காகத் தயாரிக்கப்பட்டதுபோல் உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.17 ஆவணம் வா.சா.ஆ.9ற்கு முரணாக உள்ளது என்றும்

வா.சா.ஆ.17 வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது என்றாலும் சரியல்ல.

9) வா.சா.ஆ.20 யாரால் யாருக்குக் கொடுக்கப்பட்ட ஆவணம் என்றால் வருவாய்த்துறையினரால் எனக்குக் கொடுக்கப்பட்ட ஆவணம். அதன் சர்வே எண் மற்றும் பிளாக் எண் என்னவென்றால் சர்வே எண் 561/12 மற்றும் பிளாக் எண் 2 ஆகும். வா.சா.ஆ.20 ல் உள்ள இடத்தை ஒட்டி தாவா கோவில் காணப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.20ல் கண்டுள்ள நிலம் அரசாங்கத்திற்குப் பாத்தியப்பட்டது அதை அனுபவித்து வருகிறேன் எனக்கு வேறு இடமில்லை என்று கூறித்தான் இந்த இடத்திற்கு அரசிடம் பட்டா கேட்டு அவர்கள் வீட்டுமனை ஒப்படைப்பு செய்து என் பெயரில் பட்டா கொடுத்தார்கள் என்றால் சரிதான், அரசு விதிமுறைகளுக்குட்பட்டு எங்கள் அனுபவத்தின் பேரில் பட்டா வழங்கப்பட்டது. வா.சா.ஆ1 முதல் வா.சா.ஆ.4 ஆவணப்படி தாவா சொத்தும் அதைச் சுற்றியுள்ள இடங்களும் எனக்குப் பாத்தியமில்லை என்றால் சரியல்ல. எனக்கு வேறு வீடு மற்றும் இடம் இல்லை என்பதால்தான் அரசிடம் கூறி விண்ணப்பித்ததன் அடிப்படையில் இந்த இடம் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல, எனக்கு வேறு நிலங்கள் உள்ளன. எனக்கு வேறு நிலங்கள் இருந்திருந்தால் அரசு எனக்கு பட்டா வழங்கியிருக்காது என்றாலும் வழக்கிற்காகப் பொய்யாக வேறு இடங்கள் உள்ளதாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்து மற்றும் அதனைச் சுற்றியுள்ள சொத்துக்களும் எனக்கும் எங்கள் பங்காளிகளுக்கும் பாத்தியப்பட்டதாக வழக்கிற்காகப் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

10) என்னுடைய கூடுதல் பிரமாணப் பத்திரிக்கை பத்தி 3ல் சர்வே எண் 561/12 இல் உள்ள நிலம் அரசுப்புறம்போக்கு நிலம் என்று எதிர்வழக்குரையில் கூறியுள்ளது தவறு அது நத்தம் புறம்போக்கு இடம் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். கோவில் நிர்வாகத்தில் பிரதிவாதிகளுக்கும் மற்ற பொதுமக்களுக்கும் எவ்வித உரிமையும் கிடையாது என்று வழக்கிற்காகப் பொய்யாகக் கூறுகிறேன் என்றால் சரியல்ல. அனைத்து சமுதாய மக்களுக்கும் கோவிலிலும் கோவில் நிர்வாகத்திலும் உரிமை உள்ளது என்றால் சரியல்ல. கோவில் இடம் அரசுக்குப் பாத்தியப்பட்ட புறம்போக்கு இடம் என்பதால் எனக்கும் எங்கள் பங்காளிகளுக்கும் எந்தவொரு பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல. தாவா கோவில் ரங்கனூர் பொதுமக்களுக்குரிய பொதுக் கோவில் என்றும் வழக்கிற்காக எங்களுக்குப் பாத்தியப்பட்டதாகப் பொய்யாக வழக்காடுகிறேன் என்றால் சரியல்ல.

11) கோவிலுக்கு எதிரில் நடந்துகொண்டிருக்கும் கட்டுமானம் யார் கட்டி வருகிறார்கள் என்றால் நாங்களும் எங்கள் உறவினர்களும் சேர்ந்து கட்டிக் கொண்டிருக்கிறோம். மேற்படி கட்டுமானம் தாவா சொத்தில் கட்டப்பட்டு வருகிறதா என்றால் இல்லை. மேற்படி கட்டுமானம் கோவிலா வீடா என்றால் கோவில் ஆகும்.

மேற்படி கட்டுமானத்திற்கும் தாவா சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அந்த கோவில் எங்கள் சமுதாயத்தினருக்கான தனிப்பட்ட மாரியம்மன் கோவிலாகும். தாவா கோவில் ஊர்ப் பொதுமக்களுக்கு உரிய கோவில் என்பதால்தான் தனியாக கோவில் கட்டிவருகிறோம் என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை இல்லை.)**